1970 மார்ச் 13]

நரம்புச் சிலந்தி நோய்

*** 350 வினா திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968–69-ம் ஆண்டில் மாநிலத்தில் எப்பகுதியில் நரம்புச் சிலந்தி நோய் ஏற்பட்டது ?

(இ) இந்நோயை அறவே நீக்கிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 1968–69-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1968 முதல் மார்ச் 1969 வரை) தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, வடஆர்க்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் சில இடங்களில் நரம்புச் சிலந்தி நோய் காணப்பட்டது.

(இ) இந்நோயை அறவே ஒழித்திட சுகாதார இலாகா வாயிலாக "நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம்" 1960-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், கிராமங்களின் குடி நீர் நிலைகளில் டி.டி.டி. (D.D.T) மருந்து கலக்கப்படுகிறது. இத்திட்டம் நல்ல பயனை அளிப்பதன் காரணமாக இந்நோய் படிப் படியாகக் குறைந்து தற்போது சேலம், இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : இந்த நரம்புச் சிலந்தி நோயைத் தடுப்பதற்கு தமிழ்நாட்டில் தனியாக மருத்துவமனைகள் ஏதாவது ஏற்படுத்தப்பட்டுள்ளதா ? அதேபோல் சித்தவைத்தியத்தின்மூலம் இந்த நோயை முழுவதுமாகக் குணமாக்கிவிடலாம் என்று கூறப்படுகிறதே, அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது ஆலோசனை செய்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்காக தனியாக மருத்துவ மனைகள் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. இது பொதுச் சுகாதார அமைப்பின்கீழ் செய்யப்பட வேண்டிய பணியாக இருக்கிறது. 1960-ல் இருந்து படிப்படியாக இந்த நோய் குறைக்கப்பட்டு இருக்கிறது. இந்த நோய் ஒழிக்கப்படுவதற்குள்ள ஒரே ஒரு வழி பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை எல்லா ஊர்களுக்கும் வழங்குவதன்மூலம் இந்த நோயைப் போக்க முடியும். 1960-ல் இந்த நரம்புச் சிலந்தி நோயால் 1,653 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக 13,712 பேர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1969-ல் 42 ஊர்களில்தான் இந்த நோய் இருந்து வருகிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் 365 பேர்கள்தான். ஆகவே விரைவில் அந்த நோயை ஒழித்துவிட முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் முதலில் குறிப்பிட்டபடி, இந்த நோய் சேலம், ராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில்

[1970 மார்ச் 13

அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. இப்போது 42 சிற்றூர்களில்தான் இது பரவி இருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் 365 பேர்கள்தான். அதையும் ஒழித்து விட முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இதை அறவே ஒழிக்க பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் எல்லா ஊர்களுக்கும் தருவதன் மூலம் இந்நோயை ஒழிக்க முடியும் என்பது மேற்கொள்ளப்பட்டிருக்கிற முயற்சி யாகும்.

திரு. இல. பலராமன் : அமைச்சர் அவர்களின் பதிலில் இருந்து வட ஆர்க்காடு மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இந்த நரம்புச் சிலந்தி நோய் காணப்படுகிறது? இந்த நோய் வருவ தற்குக் காரணம், அங்குள்ள மக்கள் அங்குள்ள குளம், குட்டை களில் உள்ள தண்ணீரை அருந்துவதனால்தான் ஏற்படுகிறது என் பதை அரசாங்கம் உணர்கிறதா ? ஆகவே, அப்படிப்பட்ட தண் ணீரைக் குடிக்காமல் இருப்பதற்காக அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? அந்தத் தண்ணீரில் டீ.டீ.டி. மருந்து தெளிப்பதினால்—டீ.டீ.டி. கலந்ததை அருந்துவதால் அது பாத கத்தை விளைவிக்கும் என்று ஐ.நா. மூலம் ஒரு மாதத்திற்கு முன் ஒரு அறிவிப்பு வந்திருந்ததே, அதைப்பற்றி அரசு என்ன கருது கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்தெந்த ஊர்களில் என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லை. 1960-ல் இதனால் பாதிக்கப்பட்ட ஊர்கள் 1,653 என்றிருந்தது, இப்போது 42 ஆக குறைத்துக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 13,712 பேர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அது இப்போது 365 என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் பரவ தூய்மையற்ற நீர்தான் காரணம் என்று அறியப்படுகிறது. ஆகவே பாதுகாக்கப்பட்ட குடிநீரை எல்லாக் கிராமங்களுக்கும் வழங்கு வதன்மூலம், அந்த முயற்சியை மேற்கொள்வதன்மூலம் கொஞ்ச நஞ்சமுள்ள இந்த நோயையும் தீர்க்க முடியும் என்று அந்த முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. 1971–72-க்குள்ளாக கூடுமான வரையில் எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்துதர அதற்கு முதல் இடம் அளித்து அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுவதாக இருப்பதால் இந்த நோயை அறவே ஒழித்துவிட முடியும் என்று கருதப்படுகிறது. டீ.டீ.டி. தெளிப்பதால் ஓரளவு பலன் ஏற்படுகிறது. அதனால்தான் இந்த நோய் 1960–70-க்கு இடையில் இந்தளவிற்குக் குறைக்கப்பட்டிருக் கிறது. சிறிது இருக்கிற தன்மையையும் நாளாவட்டத்தில் குறைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

திரு. எம். எஸ். மணி : இந்த நரம்புச் சிலந்தி நோய் திருச்சி மாவட்டத்திலுள்ள உடையார்பாளையம், ஜெயம்கொண்டான் ஆகிய பகுதிகளில்தான் அதிகமாக வருகிறது. காரணம், அங்குள்ள ஏரித் தண்ணீரை மக்கள் அருந்துகிற காரணத்தால் இது வாய் வழி யாகவும், உடம்பு வழியாகவும் இந்த நோய் பரவி மனிதனுக்கு

1970 மார்ச் 13]

தொந்தரவு கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நோயை ஒழிப்பதற்காக அங்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காக அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் டீ.டீ.டி. தெளிப்பதன்மூலம் இது தடுக்கப்படுகிறது. நீரை ஓரளவிற்குத் தூய்மைப்படுத்தித் தருகிற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் தருவதன்மூலம் இதை அறவே ஒழிக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. உடையார்பாளையம் தாலுகாவைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

சடையம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி.

* 351 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது கட்டப்பெறும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இதற்கான திட்டம் இப்பொழுது இல்லை. இந்தப் பள்ளிக்கு அதிகக் கட்டடங்களுக்கான அவசியத்தை ஆராயும்படி பள்ளி கல்வித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி பல ஆண்டுகளாக கட்டட வாய்ப்பு இல்லாதிருப்பதால் மாணவர்களின் நலனைக் கருதி விரைவில் கட்டட வாய்ப்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு பள்ளிக்கூடங்கள் இப்படி கட்டட வசதியில்லாமல் இருந்து வருகின்றன. இந்தக் குறிப்பிட்ட பள்ளியின் வரைவுத் திட்டம் இயக்குநரிடமிருந்து வரவில்லை. இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து நிலைமையை அறிந்து அதற்கேற்றபடி வரைவுத் திட்டத்தை அனுப்புவார்களானால் அது கவனிக்கப்படும். இப்போது இயக்குநர் அவர்கள் அளவில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.